# தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்

<u>(அறிவிக்கை எண் த.மி.ஒ.ஆ./SPR / 9/1–6,  02–05–2007 நாளிட்டது)</u>

**(ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டதன் தமிழாக்கம்)**

---

தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், 2003ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 36/2003) 86ஆம் பிரிவின்படி, உரிமம்தாரர்களால் தரம், தொடர்ச்சி மற்றும் மின்னிணைப்பின் நம்பகத்தன்மை பொறுத்து செந்தரங்களைச் செயற்படுத்துவதற்கு வகை செய்வதற்காக, 2004ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 36/2003) 86ஆம் பிரிவின்படி 2004ஆம் ஆண்டு தமிழ்நாடு மின் பகிர்மான செயல்திறச் செந்தரங்கள் செயற்படுத்தும் ஒழுங்குமுறைவிதிகளை 01–09–2004 நாளிட்ட தமிழ்நாடு அரசிதழில் குறித்துரைத்துள்ளது மற்றும் வெளியிட்டுள்ளது என்பதாலும்,

மற்றும் (தமிழ்நாடு மின்சார வாரியம்) மின் பகிர்வு உரிமம்தாரரால், மேலேயுள்ள ஒழுங்குமுறைவிதிகளின் ஒருசில வகைமுறைகளை நிறைவேற்றுவதிலுள்ள ஒருசில இடர்ப்பாடுகள் தெரிவிக்கப்பட்டுள்ளது என்பதாலும்,

மற்றும், அந்த இடர்ப்பாடுகளை நீக்குவதற்காக மேலேயுள்ள ஒழுங்குமுறைவிதிகளுக்குத் திருத்தம் செய்யும் ஒழுங்குமுறைவிதிகளைப் பிறப்பிப்பது அவசியம் எனக் கருதுவதாலும், மற்றும் மேலேயுள்ள நோக்கங்களுக்காக வகை செய்யும் அந்தத் திருத்தம் செய்யும் ஒழுங்குமுறைவிதிகள் முந்திய வெளியீட்டின் வரையறைகளுக்கு உட்பட்டிருப்பதல் வேண்டும் மற்றும் அதற்கிணங்க அத்தகைய முந்திய வெளியீடு செய்யப்பட்டுள்ளது என்பதாலும்,

தற்போது, இதற்காக, மேற்சொன்ன சட்டத்தின் 181ஆம் பிரிவுடன் சேர்த்துப் படிக்கப்படும் 57ஆம் பிரிவின்படியும் மற்றும் இதன்பொருட்டு அதனை இயல்விக்கும் பிற அனைத்து அதிகாரங்களையும் செலுத்தி, தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் இதன்மூலம், 21–07–2004 நாளிட்ட அறிவிக்கை எண். த.மி.ஒ.ஆ./SPR/9/1–இன்படி பிறப்பிக்கப்பட்ட 2004ஆம் ஆண்டு தமிழ்நாடு மின் பகிர்மான செயல்திறச் செந்தரங்கள் ஒழுங்குமுறைவிதிகளுக்கு பின்வரும் திருத்தம் செய்யும் ஒழுங்குமுறைவிதிகளைக் குறித்துரைத்துள்ளது மற்றும் 25–07–2006 நாளிட்ட அறிவிக்கை எண்.த.மி.ஒ.ஆ/SPR/ 9/1–4இன்படி பிறப்பிக்கப்பட்ட மற்றும் 16–08–2008 நாளிட்ட தமிழ்நாடு அரசிதழில்

வெளியிடப்பட்ட 2006ஆம் ஆண்டு தமிழ்நாடு மின் பகிர்மான செயல்திறச் செந்தரங்கள் (திருத்தம்) ஒழுங்குமுறைவிதிகளுடன் சேர்த்துப் படிக்கப்படும் 01–09–2004 நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் பகுதி VI – பிரிவு 2 (பின்னிணைப்பு)இல் வெளியிட்டுள்ளது.

## திருத்தம் செய்யும் ஒழுங்குமுறைவிதிகள்

**1. குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம் :**

(a) இந்த ஒழுங்குமுறைவிதிகள், 2007ஆம் ஆண்டு தமிழ்நாடு மின் பகிர்மான செயல்திறச் செந்தரங்கள் (முதலாம் திருத்தம்) ஒழுங்குமுறைவிதிகள் என்று வழங்கப்பெறும்.

(b) இது தமிழ்நாடு அரசிதழில் அவை வெளியிடப்பட்ட நாளன்று நடைமுறைக்கு வரும்.

**2. 2004ஆம் ஆண்டு தமிழ்நாடு மின் பகிர்மான செயல்திறச் செந்தரங்கள் ஒழுங்குமுறைவிதிகளின் 4ஆம் ஒழுங்குமுறைவிதியின் திருத்தம், –**

(இதன் பின்பு இதில் முதன்மை ஒழுங்குமுறைவிதி என்று குறிப்பிடப்படும்) 2004ஆம் ஆண்டு தமிழ்நாடு மின் பகிர்மான செயல்திறச் செந்தரங்கள் ஒழுங்குமுறைவிதிகளுடன் சேர்த்துப் படிக்கப்படும் 25–07–2006 நாளிட்ட திருத்தம் செய்யும் ஒழுங்குமுறைவிதிகளில், 4ஆம் ஒழுங்குமுறைவிதியில், அட்டவணை I-இன் (b) மற்றும் (c) இனங்களில் ‘‘திறன் மின்மாற்றி’’ என்ற சொற்றொடருக்குப் பதிலாக ‘‘மின் பகிர்மான மின்மாற்றிகள்’’ என்ற சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்.

**3. முதன்மை ஒழுங்குமுறைவிதியின் 7ஆம் ஒழுங்குமுறைவிதியின் திருத்தம், –**

முதன்மை ஒழுங்குமுறைவிதியின் 7ஆம் ஒழுங்குமுறைவிதியில், 1ஆம் இனத்தில், ‘‘15 நாட்கள்’’ என்ற வாசகத்திற்குப் பதிலாக, ‘‘25 நாட்கள்’’ என்ற வாசகம் அமைக்கப்படுதல் வேண்டும்.

**4. முதன்மை ஒழுங்குமுறைவிதியின் 13ஆம் ஒழுங்குமுறைவிதியின் திருத்தம், –**

முதன்மை ஒழுங்குமுறைவிதியின் 13ஆம் ஒழுங்குமுறைவிதியின், இரண்டாம் வாக்கியத்தில் ‘‘முறையீட்டைப் பெற்ற 48 மணிநேரத்திற்குள்’’ என்ற சொற்றொடர் விட்டுவிடப்படுதல் வேண்டும்.

**5. முதன்மை ஒழுங்குமுறைவிதியின் 19ஆம் ஒழுங்குமுறைவிதியின் திருத்தம், –**

முதன்மை ஒழுங்குமுறைவிதியின் 19ஆம் ஒழுங்குமுறைவிதியில், மேலேயுள்ளது பொருட்டு அல்லது அதன்பொருட்டு என்று தொடங்கும் இரண்டாம் வாக்கியத்திற்குப் பதிலாக பின்வரும் வாக்கியம் அமைக்கப்படுதல் வேண்டும்.

“ ரத்து செய்ததன் தகவலைத் தெரிவிக்கத் தவறிதன் பொருட்டு, நுகர்வோர் ஒருவர், குறிப்பிட்ட நாளன்று முறையீட்டுடன் வந்து சேர்ந்து தம்முடைய வருகையை பதிவு செய்வாரானால், அவர், குறித்துரைக்கப்பட்ட வீதத்தில் நஷ்டஈடு பெறுவதற்கு தகுதியுடையவராவார்.’’

(தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் ஆணைப்படி)

செயலாளருக்காக
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்